## கவிதைப் போட்டி - 11
## நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (24)

இமயம் முதல் குமரிவரை ஆறுகளால்
இந்தியா ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்

சாதி மதம் மறந்து மனிதர்கள் யாவரும்
சகோதரர்களாய்ச்  சங்கமிக்க வேண்டும்

உயர்ந்தவன் தாழ்ந்தவன் மனிதரில் இல்லை
உலகம் அறிந்து ஊணர்ந்து மாறிட வேண்டும்

அண்டை மாநிலங்கள் அனைத்தும் மனம் மாறி
அன்பு காட்டி மகிழ்ந்திட வேண்டும்

ஆணவக் கொலைகள் அடியோடு ஒழிந்து
அன்புக்காதலை அங்கீகரிக்க வேண்டும்

பெண்களுக்கு சமஉரிமை வழங்கிட வேண்டும்
பெண்களின் உணர்வு மதிக்கப்பட வேண்டும்

துப்பாக்கிச் சண்டை குண்டுவெடிப்பு வன்முறைகள்
தரணியில் இல்லாது ஒழிய வேண்டும்

தனியார் மருத்துவமனைகள் அரசுடைமையாக வேண்டும்
தரமான அரசுக் கல்வி அனைவருக்கும் வேண்டும்

நாளைய தலைமுறை பற்றிய கனவு ஏராளம் உண்டு
எல்லாம் நிறைவேறினால் நாடும் நலம் பெறும்

*****************